இணைப்பு-III

(433 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010–2011

1. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுக்காக, 6 இரத்த பகுப்பாய்வு (தானியங்கி உபகரணம்) கொள்முதல் செய்தல் (ரூ.30.00 இலட்சம்).

2. கால்நடைகளுக்கு வரும் நோய்களைக் கண்டறியும் பிரிவுகளுக்காக, 6 சிறுநீர் பகுப்பாய்வு (தானியங்கி) உபகரணம் கொள்முதல் செய்தல் (ரூ.3.00 இலட்சம்).

3. மின் ஆளுமைக்கு, வலைத்தளம் ஏற்படுத்துதல் (ரூ.39.15 இலட்சம்).

4. கிளை நிலையங்களுக்கு தேவையான அறைகலன்கள் வாங்குதல் (ரூ.28.00 இலட்சம்).

5. நீலகிரி மாவட்டத்தில், முயல் பண்ணை, கோழிப்பண்ணை, ஆடுவளர்ப்பு ஆகியவற்றை மகளிர் சுயஉதவிக் குழுக்களைக்கொண்டும், பழங்குடியின மகளிரைக் கொண்டும் நடத்துதல் (ரூ.20.50 இலட்சம்).

6. சினைப் பருவத்திற்கு வராத கறவை மாடுகளுக்கு மலிவு விலையில் ப்ரோஜெஸ்டிரோன் யோனி உறிஞ்சிகள் தயாரித்தல் (ரூ.9.50 இலட்சம்).

7. மீன் உற்பத்தி பொருள்களுக்கான தரமிகு கண்காணிப்பு சான்றளிப்பு மையம் அமைத்தல் (ரூ.20.00 இலட்சம்).

8. கட்டடச் செலவு நீங்கலாக தோராயமாக ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் (ரூ.150.00 இலட்சம்) செலவில், 100 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் துவக்கப்படும். இவற்றுக்கான கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உதவியுடனான ஏற்பாடுகள்மூலமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியுதவியின்மூலமும் பெறப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

9. 200 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்.

10. 200 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி அமர்த்தப்படுவார்கள். இதற்கான செலவினம், தோராயமாக ரூபாய் நான்கு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து நாற்பதாயிரம் (ரூ.4,37,40,000) ஆகும்.

11. 200 கால்நடை ஆய்வாளர்கள் (நிலை—II), வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்கள். இதற்கான செலவினம், தோராயமாக ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நான்காயிரம் (ரூ.2,63,04,000) ஆகும்.